# GOVERNMENT OF TAMIL NADU

## ABSTRACT

**Fundamental Rules - Fundamental Rule 27 - Fixation of pay on promotion or Appointment to higher post after restoration of original seniority - Government servants retired or died before such restoration - Pay fixation - Amendment - Issued.**

## PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (FR.IV) DEPARTMENT

**G.O. Ms. No. 120** **Dated 6.7.2001**

**Read :**

G.O. Ms. No. 203, Personnel and Administrative Reforms (S) Department, dated 30.10.2000.

**ORDER :**

The following amendment is issued to Fundamental Rules.

2. The amendment hereby made shall come into force on and from 30.10.2000.

---

## AMENDMENT

In the said Fundamental Rules, under Rule 27, in ruling (17), the following proviso shall be added, namely:-

"Provided that in case of Government Servants whose names were deferred for inclusion in the panel for promotion to higher post due to pendency of charges, but subsequently included in the same panel on exoneration of the charges after the date of their retirement on superannuation on appeal or review, their pay shall be fixed notionally on the date of their retirement on superannuation at the stage at which they would have drawn, had they been promoted or appointed to the higher post along with their junior for the purpose of pension and other monetary terminal benefit.

Provided further that in the case of Government Servants whose names were deferred for inclusion in the panel due to pendency of charges and have subsequently died while in service or after retirement from service, the charges shall automatically stand abate. In such cases, the pay shall be fixed notionally on the last date of their service or on the date of the retirement on superannuation, as the case may be, at the stage at which they would have drawn had they been promoted or appointed to the higher post along with their juniors for the purpose of pension and other monetary terminal benefits".

(By Order of the Governor)

Sd/-

Secreatary to Government.

# தமிழ்நாடு அரசு

## பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை.

**கடித எண். 29866/எஸ்/2001–2. நாள்24.8.2001.**

**அனுப்புநர்**

திரு.ச. மெய்கண்டதேவன், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

**பெறுநர்**

அனைத்து அரசுச் செயலாளர்கள், சென்னை – 9.

**அய்யா/அம்மையீர்.,**

**பொருள் : பொதுப்பணிகள் – ஒப்புதல் பெற்ற பதவி உயர்வுக்கான பெயர் பட்டியல் – தள்ளிவைக்கப்பட்ட நேர்வுகள் – பட்டியலில் மீளச் சேர்த்தல் – கருத்தியலான ஊதிய நிர்ணயம் – விளக்கவுரை – வெளியிடப்படுகிறது.**

**பார்வை :**
1. அரசு ஆணை நிலை எண். 368, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம் (எஸ்) துறை, நாள். 18.10.93.
2. அரசு ஆணை நிலை எண். 203, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள். 30.10.2000.

பார்வை இரண்டில் குறிப்பிடப்பட்ட அரசாணையில், உயர் பதவிக்கான தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரிக்கப்படும் பொழுது அப்பட்டியலில் சேர்க்காமல் தள்ளிவைக்கப்பட்ட அரசுப் பணியாளர்களின் முறையீடு/மேல்முறையீடு அரசின் பரிசீலனைக்குப் பின்னர், முந்தைய பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டு பதவி உயர்வு அளிக்கப்படும் முன்னரே அரசு ஊழியர் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டாலோ அல்லது பணியிலிருக்கும்பொழுது/பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் மரணமடைந்து விட்டாலோ அத்தகைய நேர்வுகளில் கீழ்க்கண்டவாறு கருத்தியலான ஊதிய நிர்ணயம் செய்ய ஆணை வெளியிடப்பட்டது :–

(அ) பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பெயர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் தள்ளி வைக்கப்பட்ட (deferred) அரசு ஊழியர், வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற பின்னர், முறையீடு/மேல்முறையீடு/அரசின் பரிசீலனைக்குப் பின்னர் தகுதி மற்றும் முதுநிலை அடிப்படையில் ஓய்வு பெறுவதற்கு முந்தைய பட்டியலில் சேர்க்கப்படுவார்களேயானால் அத்தகையோருக்கு இளையோர் பதவி உயர்வு பெற்ற நாளை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகாலப் பணிப்பயன்கள் அனைத்தும் அடையும்பொருட்டு, அடிப்படை விதி 27–ல் விதிமுறைமை (17) – ன் கீழ் ஓய்வுபெற்ற நாளன்று கருத்தியலான (Notional) ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும்.

(ஆ) பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பெயர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் தள்ளி வைக்கப்பட்ட (deferred) அரசு ஊழியர், பணியிலிருக்கும்பொழுது பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்பு மரணமடைந்தால் அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டதாகக் கருதப்படவேண்டும். அத்தகையோருக்கு, இளையோர் பதவி உயர்வு பெற்ற நாளை அடிப்படையாகக் கொண்டு, ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வு கால பணிப்பயன்கள் அனைத்தும் அடையும் பொருட்டு, அடிப்படை விதி 27–ன் விதி முறைமை (17) – ன் கீழ் , அவர் கடைசியாக பணியாற்றிய நாள் அல்லது வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற நாள், இதில் எது முன்னர் நிகழ்கின்றதோ அந்நாளிலிருந்து கருத்தியலான (Notional) ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும்.

2. பதவி உயர்விற்கான தேர்ந்தோர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் தள்ளி வைக்கப்பட்டு, 30.10.2000க்கு முன்னர் ஓய்வு பெற்ற நபர்களுக்கு அரசு ஆணை (நிலை) எண். 203, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள். 30.10.2000 – ன் படி கருத்தியலான ஊதிய நிர்ணயம் செய்ய முடியுமா என்பது குறித்து தெளிவுரை வழங்க பரிசீலனை செய்யப்பட்டது.

3. 30.10.2000 –த்திற்கு முன்னர் ஓய்வு பெற்ற நபர் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டதன் காரணமாக அவரது பெயர் தகுதியின் அடிப்படையில் பதவி உயர்வுக்கு உரிய ஆண்டு பட்டியலில் சேர்க்கலாம் என 30.10.2000த்திற்குப் பின்னர் ஆணை வெளியிடப்பட்டால், அவ்வாறான நேர்வுகளில் அரசாணை (நிலை) எண். 203, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம் (எஸ்) துறை, நாள். 30.10.2000–ல் பத்தி 4 (அ) – வில் வழங்கப்பட்ட கருத்தியலான ஊதிய நிர்ணயம் செய்யலாம் என்பதைத் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/–
அரசுச் செயலாளருக்காக.